## *64*

# செய்தித்தொடர்பின் அவசியம்

## (15:14-29)

*மிகச்சிறந்த செய்தித்தொடர்பு என்பது இன்றைய நாட்களின் உலகத்தின் புரிந்துணரப்பட்ட மாபெரும் தேவைகளில் ஒன்றாக உள்ளது.[1] திருமணத்தில் இணைந்துள்ளவர்கள், "எனது இணை என்னுடன் செய்தித்தொடர்பு கொள்வதில்லை" என்று கூறுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்கள் பிள்ளைகளுடன் மேலான வகையில் செய்தித்தொடர்பு கொள்ள ஏங்கியிருக்கும் பெற்றோர்களை நான் அறிந்திருக்கிறேன். வேலைசெய்பவர்கள், தங்களுக்கு வேலையளிப்பவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்று உண்மையில் தாங்கள் அறிவதில்லை என்று முறையிடுகின்றனர். சபை உறுப்பினர்கள், "எங்களது சபையை நடத்துபவர்கள் எங்களுடன் மேன்மையான வகையில் செய்தித்தொடர்பு கொள்ளவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்" என்று கூறுகின்றனர். '*

*"செய்தித்தொடர்பு" என்ற ஆங்கில வார்த்தை, "பொதுவில் கொண்டிருத்தல்" என்று அடிப்படையில் அர்த்தப்படுகிற ஒரு இலத்தீன் சொற்றொடரில் இருந்து வருகிறது. Koinonia[2] என்பது இதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாகும், இதன் வடிவங்கள்,ரோமர் 15:14-29ல் இருமுறை காணப்படுகின்றன (26ம் வசனத்தில் "பொருள்சகாயம்" என்றும் 27ம் வசனத்தில் "பங்குபெற்றிருக்க" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இன்றைய நாட்களில் நாம், "செய்தித்தொடர்பு" என்ற வார்த்தையைப் பொதுவாக, வாய்மொழியாகப் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களை குறிப்பதற்குப் பயன்படுத்துகிறோம். செயல்விளைவுள்ள வாய் மொழி செய்தித்தொடர்பு சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுதலை - சிந்தனைகளை "பொதுவில்" கொண்டிருத்தலை - விளைவிக்கிறது. இவ்வாறு மாத்திரமே நாம், வேறொரு நபர் நினைப்பது என்ன என்பதைப் பற்றி அறிய முடியும்.*

*"அவருடைய அடிச்சுவடுகளில் (15:1-13)" என்ற பாடம், பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முக்கியமான பகுதிபற்றிய நமது படிப்பை நிறைவுசெய்தது. நமது வரைகுறிப்பில், இந்த நிருபத்தின் எஞ்சியபகுதியானது "முடிவுரை" என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. (இப்புத்தகத்தின் வேறொரு பக்கத்தில் காணப்படும், "ரோமருக்கு எழுதிய நிருபத்தின் வரைகுறிப்பு" என்பதைக் காணவும்.) பவுலின் மிகநீண்ட ஆய்வுரைக்குப் பொருத்தமானதாக இருக்கும் வகையில், இது அவரது மற்ற எல்லா நிருபங்களில் காணப்படுவதைக் காட்டிலும் மிகநீண்ட முடிவுரையாக உள்ளது. இந்த முடிவுக்குறிப்புரைகளை நாம், நமக்கு ஆர்வம் இல்லாத அவரது தனிப்பட்ட விஷயங்கள் என்று ஒதுக்கி விடாதபடி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏவுதலினால் பவுல் எழுதியவற்றில் இருந்து கற்றுக்கொள்வதற்கான விஷயங்கள் சில எப்போதுமே இருக்கின்றன.*

*நாம் இப்பொது படித்துக்கொண்டிருக்கும் வசனப்பகுதியை எழுதியதில் பவுல், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுடன் குறிப்பிட்ட சில தகவல்*

களைப் பொதுவில் பகிர்ந்து கொண்டார். பவுல் தமது வாசகர்களுடன் எவ்வாறு செய்தித்தொடர்பு கொண்டார் என்று நாம் காண்கையில், செய்தித்தொடர்பு என்ற கலைபற்றிய சில விஷயங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

## உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள் (15:14-19அ)

**மற்றவர்களைப் பாராட்டுங்கள்**

1ம் அதிகாரத்தில் பவுல், ரோமாபுரியில் இருந்த சபைக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொண்டார்: "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்த மாகிறபடியினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (வசனம் 8). அந்தக் கூற்றைத் தொடர்ந்து, இந்தத் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் உரைத்த போதனை மற்றும் புத்திமதி ஆகியவற்றை அதிகாரத்திற்குப் பின் அதிகார மாக நாம் கண்டோம். இது, அவர்கள் விசுவாசத்தைப் பற்றி தாம் (பவுல்) மனம் *ஈர்க்கப்படாது* இருந்ததாக ஒரு மனப்பதிவை அவர்களிடம் விடக்கூடும் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். அவர் இந்த நிருபத்தின் முடிவை நெருங்குகையில், தமது வாசகர்களைக் குறித்து ஒரு உயர்வான மதிப்பைக் கொண்டிருக்கிறார் என்று அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்: "என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல[3] வல்லவர்களுமா யிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன்" (15:14).[4]

"நற்குணத்தினால் நிறைந்தவர்களும்" என்பது அவர்கள் பாவமே இல்லாதிருந்தனர் என்றல்ல (காண்க ரோமர் 3:23), ஆனால் அவர்கள் சாராம்சத்தில் நல்ல மக்களாக இருந்தனர் என்று அர்த்தப்படுகிறது. "சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும்" என்பது அவர்கள் எல்லா வற்றையும் அறிந்திருந்தனர் (சர்வஞானிகளாக இருந்தனர்) என்றல்ல, ஆனால் அவர்கள் சுவிசேஷத்தின் அடிப்படைகளை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படுகிறது. ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய இந்த உண்மைகளைப் பவுல் எவ்வாறு அறிந்தார்? அவர் அந்த சபைக் குழுமத்தின் புகழ்ச்சியை அறிந்திருந்தார் (1:8; 16:19), மற்றும் அங்கிருந்த பல உறுப்பினர்களைத் தனிப்பட்ட வகையில் அறிந்திருந்தார் (16:3-15). இத்துடன் கூடுதலாக அவர் ஆவியானவரிடத்தில் இருந்து தெளிவான அறிவைப் பெற்றிருந்தார்.

பாராட்டுதலைச் சொற்களில் வெளிப்படுத்துதலின் முக்கியத்துவ மானது, செய்தித்தொடர்பு பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடங்களில் ஒன்றாக உள்ளது. நல்ல பணிகளைச் சாதாரணமானதாக [நன்றி எதுவும் தெரிவிக்கப்படத் தேவையில்லை என்பதாக] எடுத்துக்கொள்ளுதல் சுலபமானதாக உள்ளது. பவுல் தமது சகோதரர்களிடத்தில் பலங்களுக்காகக் கண்ணோக்கினார் மற்றும் அந்தப் பண்புகளுக்காக அவர்களைப் புகழ்ந்தார். அவரது நிருபங்களில் பெரும்பான்மையானவற்றின் முன்னுரையில், பாராட்டுதல் உள்ளடக்கியிருக்கிறது. நீங்களும் நானும் மற்றவர்களின் நேர் மறைப் பண்புகளைக் கண்ணோக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பின்பு நாம்,

"நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களைப் பாராட்டுகிறேன்" என்று கூறக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து பவுல், "இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன்" என்று கூறினார் (வசனம் 15:16ஆ). பவுலின் மிகச்சிறந்த நிருபம் பற்றிய என்ன ஒரு குறைமதிப்புக்கூற்றாக உள்ளது இது: "சில குறிப்புகளைப்பற்றி நான் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்!" தமிழில் இது "இவைகளை" என்று மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கருத்துக்களைப் பவுல் "அதிக தைரியமாய்" எழுதியதாகக் கூறினார். "அதிக தைரியமாய்" என்பது "தைரியமாயிருக்க," "துணிந்திருக்க" என்று அர்த்தப்படுகிற *tolmao* என்பதன் வினையுரிச்சொல்லில் இருந்து வந்துள்ளது.[5] 15:18ல் *tolmao* என்பது "துணிவ(தில்லை)" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்கள் "... சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களு மாக" இருந்திருந்தால், பவுல் அவர்களுக்கு இவ்வளவு தைரியமாக எழுதியது ஏன்? அவர் இரண்டு காரணங்களைக் கொடுத்தார். முதலாவது, "அவர்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு" (15:16அ). சுவிசேஷத்தைப் பவுல் விளக்கப்படுத்தியது போல் மிகச்சரியாக அவர்கள் முன்பு ஒருக்காலும் கேள்விப்பட்டு இருந்ததில்லை என்று நான் நிச்சயமாகக் கூறமுடியும், ஆனால் அவர்கள் பின்வரும் அடிப்படை சத்தியங்களை அறிந்திருந்தனர்:

- நாம் யாவரும் தேவனுடைய கிருபை தேவைப்படும் நிலையில் உள்ள பாவிகளாக இருக்கிறோம்.
- கிறிஸ்துவின் மரணம் நமக்கு இரட்சிப்பைச் சாத்தியமாக்கிற்று.
- நாம் இரட்சிக்கப்பட்ட பின்பு, நாம் வேறுவகையான வாழ்வை வாழவேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.
- தேவன் பரலோகத்தில் நமக்கு ஆச்சரியமான விஷயங்களை வைத்திருக்கிறார்.
- இந்த சத்தியங்களைப் பவுல் அவர்களுக்கு "ஞாபகப்படுத்திய போது" புரிந்துகொள்ளுதலின் புதிய ஆழங்களுக்கு அவர்களை அவர் எடுத்துச் சென்றார்.

நம் யாவருக்கும், வேதாகமத்தின் அடிப்படை சத்தியங்கள், அவ்வப்போது நினைவூட்டப்படுதல் வேண்டும். நினைவூட்டுதல் என்பது புதிய ஏற்பாட்டு பிரசங்கித்தல் மற்றும் போதித்தல் ஆகியவற்றின் வலிவார்ந்த பகுதியாக இருந்தது (உதாரணமாக, 2 பேதுரு 1:12-15; 3:1 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்). சுவிசேஷப் பிரசங்கியார்கள், தங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, சுவிசேஷத் தின் மையமான சத்தியங்களை நினைவூட்டுவதுபற்றி ஒருக்காலும் வருத்தம் தெரிவிக்கத் தேவையில்லை,[6] மற்றும் கிறிஸ்தவர்கள், "ஆனால் நாங்கள் இவை எல்லாவற்றையும் ஏற்கனவே கேள்விப்பட்டு இருக்கிறோம். எங்களுக்கு *புதிதாக* சில விஷயங்கள் தேவைப்படுகின்றன" என்று கூறிக் குற்றப்படக் கூடாது.[7]

பவுல், புறஜாதியாருக்கு அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டு இருந்தார் என்பது, அவர் இவ்வளவு தைரியமாக அவர்களுக்கு எழுதுவதற்கான இரண்டாவது காரணமாக இருந்தது. அவர், "புறஜாதிகளுக்கு

இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்[8] பொருட்டு, தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே ... இவைகளை நான் அதிக தைரியமாக எழுதினேன்" என்று கூறினார் (ரோமர் 15:15ஆ, 16; காண்க 1:5; 11:13). ரோமாபுரி நகரம், புறஜாதியாருடைய உலகத்தின் அரசியல் மையப்பகுதியாக இருந்ததால், அந்த நகரத்தில் அவர் செயல்தாக்கம் ஏற்படுத்த வேண்டும் என்பது பொருத்த மானதாகவே இருந்தது.

பவுல், புறஜாதியாருக்குத் தமது ஊழியம் பற்றி விவரிக்கையில், அவர் பலிசெலுத்தும் ஆசாரியர் என்ற உருவகத்தைப் பயன்படுத்தினார்: "புறஜாதி யாராகிய பலி பரிசுத்தஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரிய மான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும்[9] ஆசாரியனாயிருந்து" (15:15அ). பவுல், தமது சுவிசேஷப் பிரசங்கம் மற்றும் புறஜாதியாரை மனமாற்றத்தில் வழிநடத்துதல் ஆகியவற்றை, பழைய ஏற்பாட்டு ஆசாரியர் பலிகளை ஆயத்தப்படுத்திச் செலுத்திய செயலுக்கு ஒப்பிட்டார் (ரோமர் 12:1). புறஜாதியார் ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டனர் (நடபடிகள் 2:38) மற்றும் பரிசுத்த மாக்கப்பட்டனர் (பிரித்து வைக்கப்பட்டனர்) (ரோமர் 6:3, 4, 17, 18, 22). இவ்வாறு, தேவனுக்கு பவுலின் "பலி"யானது "பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்த மாக்கப்பட்டது (தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டது)."

கர்த்தருடைய ஊழியத்திற்கான உங்களுடைய வட்டாரம் எதுவாக இருந்தாலும், அதை செய்யப்பட வேண்டிய ஒரு கடமை என்றல்ல, ஆனால் உங்கள் பரலோக பிதாவுக்கு உங்களால் தரப்படும் அன்பின் பலி என்ற வகையில் கண்ணோக்குங்கள். நீங்கள் கிறிஸ்தவரானபோது, "ராஜரீகமான ஆசாரியக்கூட்ட"த்தின் பாகமானீர்கள் (1 பேதுரு 2:9).

**தேவனுக்கு மகிமைசெலுத்துங்கள்**

புறஜாதியார் உலகத்தைச் சென்றடைவதில் பவுலின் வெற்றியானது அவரைக் கர்வத்தினால் நிரம்பச் செய்திருக்கக் கூடும், ஆனால் அவர் எப்போதுமே தேவனுக்கு மகிமை செலுத்தவே தீர்மானித்தார். அவர், "ஆதலால் நான் தேவனுக்குரியவைகளைக்குறித்து இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மேன்மை பாராட்ட[10] எனக்கு இடமுண்டு" என்று கூறினார் (ரோமர் 15:17). தனிப்பட்ட சாதனையைக் குறித்து மேன்மை பாராட்டுவதை வேதாகமம் ஊக்குவிப்ப தில்லை (காண்க கலாத்தியர் 6:14), ஆனால் "தேவனுக்குரியவைகளைக்குறித்து மேன்மை பாராட்டல்" என்பது எப்போதும் ஏற்புடையதாக உள்ளது.

தொடர்ந்து பவுல், ''கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை" என்று கூறினார் (ரோமர் 15:18ஆ). நாம் ஒரு அரிய செயலில் வெற்றிபெற்றால், நமது மனம் மேட்டிமையால் நிரப்பப்பட்டிருக்க சோதனை உள்ளது. அந்த அரியசெயல் தகுதியானதாகவும் முழுமையானதாகவும் இருந்தது என யூகித்தநிலையில் நாம், அந்த வாய்ப்பைக் கர்த்தரே நமக்கு அளித்து அந்த வாய்ப்பை அனுகூலப்படுத்திக்கொள்ளும் திறமையையும் நமக்குக் கொடுத்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பவுல், தாம் செய்திருந்தவை பற்றியல்ல, ஆனால் அதற்கு மாறாகத் தம்மூலமாகக் கிறிஸ்து செய்திருந்தவை பற்றியே பேசினார் (இதை அப்போஸ்தலர் 14:27 உடன் ஒப்பிடவும்).

கிறிஸ்து பவுலின் மூலமாக எதை நிறைவேற்றி*யிருந்தார்*? கர்த்தரால் வலிவூட்டப்பட்டிருந்த பவுலின் முயற்சிகள், ''புறாஜாதியாரை ... கீழ்ப்படியப்பண்ணும்'' செயலை விளைவித்திருந்தன (ரோமர் 15:18அ). சில எழுத்தாளர்கள், இவ்விடத்தில் ''கீழ்ப்படிதல்'' என்ற வார்த்தையினால் திகைப்படைந்து இருக்கின்றனர். பவுல் இவ்விடத்தில் "விசுவாசம்'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இருப்பார் என்று தாங்கள் எதிர்பார்த்திருந்ததாக அவர்கள் கூறுகின்றனர். இருப்பினும்,இரட்சிக்கும் விசுவாசம் என்பது கீழ்ப்படியும் விசுவாசமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்பவர்களுக்கு இந்தச் சொற்றொடர் திகைப்பை ஏற்படுத்துவதில்லை (காண்க 1:5; 16:26).

இந்த ''புறஜாதியாரின் கீழ்ப்படிதல்'' என்பது ''வார்த்தையினாலும் செய்கையினாலும்'' கொண்டு வரப்பட்டது (ரோமர் 15:18அ). அதாவது இது, சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததில் பவுல் *கூறியிருந்ததன்* மற்றும் அவர் பிரசங்கித்தபடியாக *வாழ்ந்திருந்ததன்* விளைவாக இருந்தது. NIV வேதாகமத்தில், "நான் சொன்னதினாலும் செய்ததினாலும், தேவனுக்குக் கீழ்ப்படியும்படி புறஜாதியாரை வழிநடத்தும்படிக்கு" என்றுள்ளது.

''அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும்,'' செல்ல, பவுலை வல்லமையுள்ளவர் ஆக்கியிருந்தார் என்பது கிறிஸ்து அவருக்குச் செய்திருந்த ஒரு செயலாகும் (வசனம் 18ஆ)[11] இந்த வார்த்தைகள், முதல் நூற்றாண்டில் அற்புதங்களின் மூன்று சிறப்புப் பெயர்களை உள்ளடக்குகின்றன: "வல்லமை" (*dunamis* என்பதிலிருந்து), "அடையாளங்கள்" (*semeion* என்பதன் பன்மை) மற்றும் "அற்புதங்கள்" (*teras* என்பதன் பன்மை) 2 கொரிந்தியர் 12:12 பவுல், "அடையாளங்கள் (*semeion* என்பதன் பன்மை)," "அற்புதங்கள் (*teras* என்பதன் பன்மை) மற்றும் அதிசயங்கள் (*dunamis* என்பதிலிருந்து)" ஆகியவை "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்களாக" இருந்தன என்று கூறினார். "அடையாளங்கள்" என்பவை, அவற்றை நிகழ்த்துபவருடன் தேவன் இருந்தார் என்பதைக் காண்பிக்கும் அற்புதங்களாயிருந்தன (எபிரேயர் 2:3, 4). அற்புதங்களைக் கண்டவர்கள் அதிசயத்தினாலும் பயபக்தியினாலும் நிரம்பியிருந்தபடியால் அவை ''அதிசயங்கள்'' என்றும் அழைக்கப்பட்டன (காண்க மாற்கு 2:12). "வல்லமைகள்" என்ற வார்த்தையானது, இந்த அற்புதங்கள் கர்த்தருடைய வல்லமையின் வெளிப்பாடுகளாக இருந்தன என்பதை வலியுறுத்திற்று. W. E. வைன் என்பவர், "ஒரு அடையாளம் என்பது,புரிந்துகொள்ளுதலுக்கு வேண்டுகோள் விடுக்கிறது, ஒரு 'அதிசயமானது' கற்பனைக்கு வேண்டுகோள் விடுக்கிறது, ஒரு வல்லமை ... இயற்கைக்கு அப்பாற்பட்டவரே அதன் ஆதாரமூலமாக இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது''[12] என்று எழுதினார்.

"ஆவியின் பலத்தினால்'' என்ற சொற்றொடர் அனேகமாக, பவுலைப் பரிசுத்த ஆவியானவரே அற்புதங்களைச் செய்யக்கூடியவராக்கினார் என்பதற்குப் பவுலின் ஒப்புதலாக மாத்திரம் இருக்கலாம். அது கூடுதல் சிந்தனை என்ற நோக்கங்கொண்டு இருந்ததென்றால், அது ஆவியானவரின் ஏவுதலால் பவுல் பிரங்கித்தலைக் குறிப்பிடக்கூடும். பவுல் தமது சாதனைகளுக்குத் தனிப்பட்ட மதிப்பு எதையும் எடுத்துக்கொண்டதில்லை. அவை ஒவ்வொன்றுமே அவருக்குள் *தேவனுடைய* கிரியையினால் ஏற்பட்ட விளைவாகவே இருந்தது.

நீங்கள் மற்றவர்களுடன் செய்தித்தொடர்பு கொள்ளுகையில், நீங்கள்

செய்துள்ளவற்றைக் கூறுவது சரியானதாகவே உள்ளது. இருப்பினும் எந்த ஒரு வெற்றிக்கும் தேவனுக்கு மகிமையைக் கொடுக்கத் தவறிவிடாதீர்கள்.

## உங்கள் காரணங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள் (15:19ஆ-22)

இந்த நிருபத்தின் தொடக்க வரிகளில் பவுல், ரோமாபுரியில் இருந்தவர்களுக்கு, "உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை" என்று கூறினார் (ரோமர் 1:13ஆ). அவர் தமது நிருபத்தின் முடிவுப் பகுதியை நெருங்குகையில், தம்மைத் தடைசெய்தது எது என்று விளக்கினார். 15:22ஐ முன்னதாகக் கண்ணோக்குங்கள்: "உங்களிடத்தில் வருகிறதற்கு இதினாலே அநேகந்தரம் தடைபட்டேன்."

### பவுல் என்ன செய்திருந்தார்

பவுல் ரோமப் பேரரசின் மேற்குப் பகுதிக்குப் பயணம் செல்வதற்கு முன்னர், அவர் ரோமப் பேரரசின் கிழக்குப் பகுதியில் தமது ஊழியத்தை முடிக்க வேண்டியிருந்தது என்பது அவரது அடிப்படைக் காரணமாயிருந்தது. கடைசியாக அவர், அந்தப் பணிப்பொறுப்பு நிறைவேறியது என்று கருதினார். அவர், "இப்படி எருசலேம்[13] துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம்[14] தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 19). இல்லிரிக்கம் என்பது, ஆதிரியாக் கடலில், மக்கெதோனியாவின் வடக்கு எல்லைப் பகுதியில் இருந்த ரோமாபுரி மாகாணம் ஆகும். (வேறொரு பக்கத்தில் உள்ள வரைபடத்தைக் காணவும்.) இது தல்மாத்தியா பகுதியை உள்ளடக்கி இருந்தது (2 தீமோத்தேயு 4:10ஐக் காணவும்). பவுல் இல்லிரிக்கம் தேசத்தில் பிரசங்கித்ததற்கு அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பதிவு எதுவும் இல்லை, ஆனால் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை எழுதியவரான லூக்கா, பவுலின் ஊழியத்தைப் பற்றிக்கூறியதில் தேர்ந்து கொண்டு எழுதினார் என்பதை நினைவில் வையுங்கள். அப்படிப்பட்ட ஒரு முயற்சியானது அப்போஸ்தலர் 20:1, 2ன் சொற்றொடராக்கத்திற்குப் பொருந்துவதாக இருக்கும். "இல்லிரிக்கம் தேசம் வரைக்கும்" என்ற வார்த்தைகள் "இல்லிரிக்கம் தேசத்தின் எல்லைகள் வரைக்கும்" என்று மாத்திரம்கூட அர்த்தப்படலாம். பவுல், "நான் இந்தப் பகுதி*முழுவதிலும்* பிரசங்கித்திருக்கிறேன்" என்று மாத்திரம் கூறினார். அமெரிக்காவில் நாங்கள், இதே சிந்தனையை, "நான் லாஸ் ஏஞ்லஸ் நகரில் இருந்து நியூயார்க் வரையில் பிரசங்கித்திருக்கிறேன்" என்று விளக்கியுரைப்போம்.[15]

பவுல், அந்தப் பகுதி முழுவதிலும் "சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" என்று கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? அவர், ஒவ்வொரு மாகாணத்திலும் தாம், ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், பையனுக்கும், பெண்பிள்ளைக்கும் பிரசங்கித்து இருந்ததாக அர்த்தப்படுத்தவில்லை. மாறாக அவர், பிரசங்கித்தலின் மூலமாகத் தாம், அந்த வெவ்வேறு பகுதிகள் முழுவதிலும், பெருமளவு மக்கள் தொகையுள்ள மையங்களில் சபைகளை நிலைநாட்டியிருந்ததாகவே அவர் அர்த்தப்படுத்தினார். பின்பு அவர் அந்த சபைக்குழுமங்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களுக்குச் சுவிசேஷ ஊழியர்களை அனுப்பி வைக்கும் பொறுப்பைக்

கட்டளையிட்டிருந்தார்.

இவ்வாறாக, செய்தித்தொடர்பின் ஒரு முக்கிய கூறாக, பவுல் தாம் செய்திருந்தவை பற்றிய விஷயங்களைப் பகிர்ந்துகொண்டார். பின்வரும் காட்சி சிலருக்கு நன்கு பழக்கமானதாக இருக்கலாம்:[16]

> தாய்: "நீ எங்கு சென்றிருந்தாய்?"
> இளம் வயது மகன்: "வெளியே."
> தாய்: "அங்கு நீ என்ன செய்தாய்?"
> இளம் வயது மகன்: "ஒன்றுமில்லை."

இது செய்தித்தொடர்பாக இருப்பதில்லை

**பவுல் ஏன் இதைச் செய்திருந்தார்**

செய்தித்தொடர்பு ஆழமாகிறபோது, அது நாம் *என்ன* செய்துள்ளோம் என்பது பற்றி மட்டும் அல்ல, ஆனால் *ஏன்* அதைச் செய்துள்ளோம் என்பதும் உள்ளடங்குகிறது. 20 மற்றும் 21ம் வசனங்களில் பவுல், தமது தனிப்பட்ட "ஊழிய செயல்முறை"யினுள் ஒரு உட்கண்ணோட்டத்தைக் கொடுத்தார்:

> மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்களென்று எழுதியிருக்கிறபடியே, நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.[17]

ஏற்கனவே இருந்த சபைக்குழுமங்களில் ஊழியம் செய்வதல்ல, ஆனால் அதற்கு மாறாக, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் ஒரு முன்னோடியாக இருந்து, புதிய சபைக்குழுமங்களை நிலைநாட்டுவதே பவுலின் இலக்காக இருந்தது. புகழ்பெற்ற ஒரு தொலைக்காட்சித் தொடர் மற்றும் திரைப்படத்தொடரில் இருந்து ஒரு வரியைத் தழுவியமைத்துக்கொள்வதென்றால், சுவிசேஷ ஊழியர் எவரும் இதுவரையில் சென்றிராத பகுதிகளுக்குத் தைரியமாகச் செல்வதே பவுலின் பேராவலாக இருந்தது.[18] இதற்கு அவர் ஏசாயா 52:15ல் இருந்து மேற்கோள் காண்பித்தார் (இது பழைய ஏற்பாட்டில் இருந்து ரோமருக்கு எழுதிய நிருபத்தில் கையாளப்பட்ட கடைசிக் குறிப்பு ஆகும்) ஏசாயா 52ம் அதிகாரம் பாடுபடும் ஒரு ஊழியக்காரர் பற்றிய சங்கீதமாகும். 15ம் வசனம், பாடுபடும் ஊழியக்காரர் (கிறிஸ்து) மேன்மைப் படுத்தப்படுவதைக் காண்பதால் மக்களினங்களும் அரசர்களும் திகைத்தலை முன்னெதிர் நோக்குகிறது. இவ்வார்த்தைகள், "அவரைப் பற்றிய செய்தியெதுவும் பெற்றிராதவர்களுக்கு" மற்றும் "கேள்விப்பட்டிராதவர்களுக்கு" நற்செய்தியை எடுத்துச் செல்லுதல் என்ற பவுலின் இலக்கை விவரிக்க ஏற்புடையவைகளாக உள்ளன.

பவுலின் ஊழிய செயல்முறை ஒவ்வொரு பிரசங்கியாராலும் தழுவிக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை. பல்வேறு மக்கள் தேவனால் தரப்பட்ட பல்வேறு வரங்கள் கொண்டுள்ளனர் (காண்க ரோமர் 12:4-6அ) 1 கொரிந்தியர் 3:6ல் பவுல் தமது ஊழியம் மற்றவர்களின்

ஊழியத்தில் இருந்து எவ்வாறு வேறுபட்டிருந்தது என்பதை விவரிக்க, விவசாய ரீதியான பேச்சுருவம் ஒன்றைப் பயன்படுத்தினார். அவர் கொரிந்து சபையில் விதையை நட்டதாக, ஆனால் அப்பொல்லோ அதற்கு நீர்பாய்ச்சியதாகக் கூறினார். அதே அதிகாரத்தில் 10ம் வசனத்தில், அவர் ரோமர் 15:21ல் பயன்படுத்திய கட்டிடக்கலைரீதியான ஒப்புவமையைப் பயன்படுத்தினார்: "புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம்போட்டேன். வேறொருவன் அதின்மேல் கட்டுகிறான்." பல பிரசங்கியார்கள், நிலைநாட்டப்பட்டுள்ள சபைக்குழுமங்களில் ஊழியம் செய்து அவர்கள் ஆவிக்குரிய மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றில் வளர உதவி செய்வதில் சிறப்பாகப் பொருந்துபவர்களாக உள்ளனர். இருந்தபோதிலும், தொடுவானத்தில் தங்கள் கண்களை வைத்து, இராஜ்யத்தின் விதையை ஊன்றுவதற்குப் புதிய இடங்களுக்காகக் கண்ணோக்கும் "பவுல் கள்" இன்னமும் நமக்குத் தேவை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், ரூயல் லெம்மன்ஸ் எனபவர், "நிலைநாட்டப்பட்ட மற்றும் அமைவுபெற்ற சபைக்குழுமங்களில் பிரசங்கிக்கும் 10,000 மனிதர்கள் தங்கள் உடைமைகளைச் சேகரித்துக்கொண்டு, சுவிசேஷம் அறியப்படாத இடங்களுக்குச் சென்றால், தூதர்கள் எவ்வளவாக அகம்மகிழ்வார்கள்!" என்று எழுதினார்.[19]

பவுல், "உங்களிடத்தில் வருகிறதற்கு இதினால் அநேகந்தரம் தடைபட்டேன்" என்று விளக்கம் அளித்தார் (வசனம் 22) - அதாவது, அவர் செல்ல வேண்டும் என்று கர்த்தர் விரும்பிய புதிய பகுதிகள் எப்போதுமே இருந்தபடியால் அவர் ரோமாபுரி செல்வது தடைப்பட்டிருந்தது. நாம் செய்யும் செயல்களை ஏன் செய்கிறோம் என்று விளக்கப்படுத்துதலானது, செய்தித்தொடர்புப் பிரச்சனைகள் எல்லாவற்றையும் தீர்த்துவைக்காது, ஆனால் அது உதவியாயிருக்கும்.

## உங்கள் திட்டங்கள் பற்றிய கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள் (15:23-29)

பவுல், தாம் செய்திருந்தவற்றை மற்றும் அவற்றை ஏன் செய்தார் என்பவற்றைப் பற்றிக் கருத்தை பகிர்ந்துகொண்டபின்பு, தாம் செய்வதற்குத் திட்டமிட்டவற்றைப் பற்றியும் அந்தத் திட்டங்கள் தமது வாசகர்களை எவ்வாறு உள்ளடக்கிற்று என்பது பற்றியும் கருத்தைப் பகிர்ந்துகொண்டார். அவர், "இப்பொழுது இந்தத் திசைகளிலே எனக்கு இடமில்லாதபடியினாலும்" என்று தொடங்கினார் (வசனம் 23அ). "இந்தத் திசைகளிலே" என்பது எருசலேம் மற்றும் இல்லிரிக்கம் ஆகியவற்றிற்கு இடையில் இருந்த எல்லா எல்லைப்பகுதியையும் குறிப்பிடுகிறது. பேரரசின் அந்தப்பகுதியில் தாம் பிரசங்கிக்கக் கூடிய எந்த இடமும் இனியில்லை என்றோ அல்லது அந்த மாகாணங்களில் இருந்தவர்களில் எவரொருவரும் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டிய அவசியம் இனியும் இல்லை என்றோ பவுல் அர்த்தப்படுத்தவில்லை. மத்தியதரைக்கடலைச் சுற்றிலும் இருந்த உலகத்தின் கிழக்குப் பகுதியில், அவர் தமது தனிவகையான ஊழியத்தை நிறைவேற்றியிருந்ததாக மாத்திரம் அர்த்தப்படுத்தினார்.

### ரோமாபுரிக்கு ஒரு விருப்பப் பயணம்

அடுத்ததாகப் பவுல், தமது வாசகர்களுக்கு, அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற தமது விருப்பம் பற்றிக் கூறினார். அவர், "உங்களிடத்தில் வரும்படி அநேக வருஷமாய் எனக்கு மிகுந்த விருப்பம்"[20] "உண்டாயிருக்கிறபடியினாலும்"

என்று கூறினார் (வசனம் 23ஆ). முன்னதாக அவர் கொரிந்தியர்களிடத்தில், தாம் "உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க" விரும்பியதாகக் கூறியிருந்தார் (2 கொரிந்தியர் 10:16). அவர் எபேசுவில் இருந்தபோது, "நான் ... ரோமாபுரியையும் பார்க்கவேண்டியதென்று" கூறியிருந்தார் (நடபடிகள் 19:21). இப்போது கடைசியாக, அவர் மேற்கு திசையில் பயணத்திற்குத் திட்டவட்டமான திட்டங்களை ஏற்படுத்தினார் அவர், "நான் ஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணம்பண்ணுகையில் உங்களிடத்தில் வந்து, உங்களைக் கண்டுகொள்ளவும், உங்களிடத்தில் சற்றுத் திருப்தி யடைந்தபின்பு, அவ்விடத்திற்கு உங்களால் வழிவிட்டனுப்பப்படவும், எனக்குச் சமயங்கிடைக்குமென்று நம்பியிருக்கிறேன்" என்று கூறினார் (ரோமர் 15:24).

பவுல், ஸ்பானியாவுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்தார், ஆனால் முதலில் அவர் ரோமாபுரியில் இருந்தவர்களைப் பார்க்க அங்கு நிற்க விரும்பினார். சீரியாவின்அந்தியோகியா என்ற நகரம்தான் அவருடைய செயல்பாடுகளுக்கு அடித்தளமாக இருந்திருந்தது (நடபடிகள் 13:1-3; 14:26-28), ஆனால் ஸ்பானியா மற்றும், மத்தியதரைக்கடல் பகுதி உலகத்தின் மேற்குப்பகுதியில் இருந்த பிறநாடுகள், அந்தியோகியாவில் இருந்து நீண்டதொலைவில் இருந்தன. பவுல், மேற்கில் சுவிசேஷத்தை எடுத்துச் செல்வதற்கு, ரோமாபுரியைத் தமது செயல்பாடுகளுக்கு அடித்தளமாக ஏற்படுத்த நோக்கங்கொண்டு இருந்தார் என்று பெரும்பான்மையான எழுத்தாளர்கள் நம்புகின்றனர்.

ரோமாபுரியில் இருந்த சபை, நன்கு நிலைநாட்டப்பட்டதாகவும் தனது விசுவாசத்திற்காக உலகம் முழுதிலும் அறியப்பட்டதாகவும் இருந்தது (ரோமர் 1:8). பவுல், "நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்ட" விருப்பம் கொண்டு இராதபடியால் (15:21), அவர் ரோமாபுரியில் தங்கியிருக்கத் திட்டமிடவில்லை, ஆனால் அதற்கு மாறாக அவர், "கடந்து செல்லுகையில்" அங்கிருந்த கிறிஸ்தவர்களைக் காண விரும்பினார். இருப்பினும் இது, அவர் ரோமாபுரியில் ஒரு இரவு மாத்திரம் தங்கியிருப்பார் என்று அர்த்தப்படுவ தில்லை. அவர் தமது பயணத்தை மீண்டும் தொடரும் முன்பு, அங்கு தமது சகோதர சகோதரிகளுடன் "சற்று" இணைந்திருக்க - அவர்களுக்கு ஆவிக்குரிய சில வரங்களைக் கொடுக்கவும் அவர்களின் விசுவாசத்தால் ஆறுதல் அடையவும் (1:11, 12) - விரும்பினார்.

பவுல், ஸ்பானியாவுக்குச் செல்லும் "[தமது] வழியில்" ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களால் ''உதவியளிக்கப்பட்டிருக்கலாம்'' என்று நம்பியிருந்தார். இது ஆங்கில வேதாகமத்தில் "To be helped on my way" என்றுள்ளது. இது "முன்னதாக அனுப்ப" என்று அர்த்தப்படுகிற *propempo* (*pro* [''முன்னதாக''] மற்றும் *pempo* [''அனுப்ப'']) என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது. பவுலின் நாட்களில், *propempo* என்பது விசேஷித்த அர்த்தம் கொண்டிருந்தது:

> இவ்வினைச்சொல் ... ஏறக்குறைய, சுவிசேஷ ஊழியர்களுக்கு அவர்களின் வழியில் உதவுதலுக்கான கிறிஸ்தவ நுட்பச் சொற்றொடராயிற்று. சந்தேகத் திற்கு இடமின்றி, இது நல்விருப்பங்கள் மற்றும் ஒரு ... ஜெபம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றை அர்த்தப்படுத்திற்று. பெரும்பான்மையான விஷயங்களில் இது அவர்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும்

*பணம் ஆகியவற்றைக் கொடுப்பதையும் சில வேளைகளில் அவர்களின் வழியில் ஒரு பகுதிக்காவது நல்ல பாதுகாவலர்களை அளித்தலையும் உள்ளடக்கியிருந்தது.*[21]

ஒரு கிரேக்கச் சொற்களஞ்சியம், *propempo* என்ற வார்த்தையை, "*ஒருவரின் பயணத்தின்போது தேவைப்படும் உணவு, பணம் ஆகியவை கொடுத்து உதவுதல்,* [பயணத்] தோழர்களையும், பயணத்திற்கான வழிவகையையும் ஏற்பாடு செய்தல், ... *ஒருவரை வழியனுப்பி வைத்தல்*" என்று விளக்கப்படுத்துகிறது.[22]

**எருசலேமுக்குத் தேவைப்பட்ட ஒரு பயணம்**

பவுல், ஆதிரியாக் கடலில் இத்தாலிக்கு நேர் எதிராக இருந்த கொரிந்து நகரத்தில் இருந்து [இந்த நிருபத்தை] எழுதினார். அவர் ரோமாபுரியைக் காணவேண்டும் என்று பலத்த விருப்பம் கொண்டிருந்தபடியால், "அங்கு நீங்கள் உங்கள் ஊழியத்தை முடித்திருந்தால், ஏன் இங்கு நீங்கள் வந்துசேர வில்லை?" என்று கேட்கப்பட்டிருக்கலாம். (ரோமாபுரிக்குச் செல்ல, அவரது நிருபத்திற்குத் தேவைப்பட்ட காலத்தைவிட அவருக்கு அதிகமான காலம் தேவைப்பட்டிருக்காது.) இருப்பினும் பவுல், ரோமாபுரிக்கு உடனடியாகச் செல்வதற்குப் பதிலாக, எதிர்த்திசையில் - கிழக்கில் எருசலேமுக்கு - முதலில் செல்லத் தலைப்பட்டார், இது அவரது பயணத்தில் இரண்டாயிரம் மைல்களைக் கூடுதலாக்கும். பவுல், தாம் என்ன செய்யவிருந்தார் என்பதையும் அதை ஏன் செய்வார் என்பதையும் விளக்கப்படுத்த விரும்பினார். அவர், "இப்போழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவிசெய்யுங்காரியமாக நான் எருசலேமுக்கு பிராயணம்பண்ண[23] எத்தனமாயிருக்கிறேன். மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம்[24] செய்யவிருப்பங்கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினார் (15:25, 26).

பவுலின் இரண்டாம் மற்றும் மூன்றாம் சுவிசேஷப் பயணங்களின்போது, அவர் எருசலேமுக்கு எடுத்துச் செல்லப் பணம் சேகரித்திருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு அவர், அந்தியோகியாவில் இருந்த சீஷர்களிடமிருந்து யூதாவில் இருந்த மூப்பர்களிடத்திற்குக் காணிக்கை எடுத்துச் சென்ற விஷயத்தில் உதவியிருந்தார் (நடபடிகள் 11:27-30; 12:25). இப்போது அவர், "எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களில் ஏழைகளாக இருந்தவர்களுக்கு" பொருள்சகாயத்தை எடுத்துச் சென்று கொண்டிருந்தார். எருசலேம் நகரம் செல்வம் மிக்கது என்ற பெயர் அற்றதாக இருந்தது, மற்றும் அங்கு வாழ்ந்திருந்த கிறிஸ்தவர்கள், மற்ற சராசரிக் குடிமக்களைப் பார்க்கிலும் அதிக ஏழைகளாக இருந்திருக்கலாம்.[25] "ஒருவர் எருசலேமில் வாழ்ந்திருந்தால், கிறிஸ்தவராக இருப்பதும் ஏழையாக இருப்பதும் ஒன்றாகச் சென்றன" என்று கூறப்பட்டுள்ளது.[26]

எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேகரித்தல் என்ற கருத்து எங்கே, எப்போது அல்லது எவ்வாறு தொடங்கப்பட்டது என்று நாம் அறிவதில்லை. இதற்கான விதையானது, பவுலும் பர்னபாவும், யாக்கோபு, பேதுரு மற்றும் யோவான் ஆகியோரைச் சந்தித்தபோது விதைக்கப் பட்டதா? எருசலேமில் இருந்த அந்த நடத்துனர்கள் பவுலையும் பர்னபாவையும், "தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படிக்கு கேட்டுக்கொண்டிருந்தனர்."

"அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்" என்று பவுல் எழுதினார் (கலாத்தியர் 2:10). புறஜாதிக் கிறிஸ்தவர்கள் மற்றும் யூதக்கிறிஸ்தவர்கள் ஆகியோருக்கு இடையில் உறவுகள் எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்று பவுல் ஆழ்ந்து சிந்தித்தபோது இந்தக் கருத்து வந்திருந்ததா? அந்தத் திட்டம் எவ்வகையில் உதித்திருந்தாலும், அதில் பரிசுத்தஆவியானவர் ஈடுபட்டிருந்தார் என்று நாம் தைரியமாயிருக்க முடியும்.

இந்த பணம் சேகரித்தல் பற்றி நாம் அறிவது யாவும், 1 கொரிந்தியர் 16:1-4 மற்றும் 2 கொரிந்தியர் 8:1-9:15 மற்றும் நமது தற்போதய வசனப்பகுதி ஆகியவற்றிலிருந்தே எடுக்கப்படுகிறது. பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில், சபைகளில் பணம் சேகரிக்கும்படி அவர் ஊக்குவித்திருந்தார்; (இப்போது ஏறக்குறைய முடிவடைந்த நிலையில் இருந்த) அவரது மூன்றாம் பயணத்தில் அவர் நிதிகள் சேகரித்துக் கொண்டிருந்தார். ரோமர் 15:26ல் அவர் மக்கெதோனியா மற்றும் அகாயா[27] மாகாணங்களைச் சேர்ந்தவர்களிடத்தில் இருந்து பெறப்பட்ட உதவியைக் குறிப்பாக உரைத்தார், ஏனெனில் அந்தப் பகுதிகள், அவரது பிரயாசத்தின் அப்போதைய களங்களாக இருந்தன. கலாத்தி யாவில் இருந்த சபைக்குழுமங்களும் (காண்க 1 கொரிந்தியர் 16:1) இந்தத் *திட்டத்தில்* ஈடுபட்டிருந்தன என்றும் நாம் அறிகிறோம், மற்றும் அனேக மாக ஆசியாவில் இருந்த கிறிஸ்தவர்களும் இதில் பங்கேற்றிருக்கலாம் (நடபடிகள் 20:4[28]).

"மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய விருப்பங்கொண்டிருக்கிறார்கள்" (ரோமர் 15:26) என்று கூறிய பின்பு பவுல், "இப்படிச்செய்வது நல்லதென்று எண்ணினார்கள்; இப்படிச் செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும் இருக்கிறார்கள்" என்று கூறினார் (வசனம் 27அ). புறஜாதிக் கிறிஸ்தவர்கள் யூதக் கிறிஸ்தவர்களுக்குக் *கடன்பட்டிருந்தார்களா?* அது எவ்வாறு இருக்க முடியும்? தொடர்ந்து பவுல், "எப்படியென்றால் புறஜாதி யார் அவர்களுடைய ஞானநன்மைகளில் பங்குபெற்றிருக்க,[29] சரீரநன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே" என்று கூறினார் (வசனம் 27ஆ). சுவிசேஷம் முதலாவது யூதர்களுக்கே பிரசங்கிக்கப் பட்டிருந்தது (நடபடிகள் 2:5, 14-36). பின்பு யூதப்பிரசங்கியார்கள் புறஜாதி யார்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டனர். இவர்களில் பேதுருவும் (நடபடிகள் 10:1-11:18) பவுலும் இருந்தனர். யூதர்கள் தங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் புறஜாதியாருடன் பகிர்ந்துகொண்டபடியால், புறஜாதியார் தங்கள் பொருளாதார ஆசீர்வாதங்களை யூதர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல் பொருத்தமானது என்பதே பவுலின் வாதமாக இருந்தது.

இந்த பொருள்சகாயம் புறஜாதிக் கிறிஸ்தவர்கள் *செய்ய விரும்பிய* ஒன்றாக இருந்ததாகவும் ("இப்படிச்செய்வது நல்லதென்று எண்ணினார்கள்") இதைச் செய்ய அவர்கள் *கடமைப்பட்டிருந்தனர்* என்றும் (அவர்கள் யூதக்கிறிஸ்தவர்களுக்கு "கடனாளிகளாயும் இருக்கிறார்கள்") என்றும் பவுல் குறிப்பிட்டார். ஒரு பணிப்பொறுப்பானது எவ்வாறு ஒரே வேளையில் ஒரு கடமையாகவும் மற்றும் ஒருவர் அதைச் செய்ய விரும்பும் காரணத்தால் அதைச் செய்வதாகவும் எப்படி இருக்க முடியும்? டக்ளஸ் J. மூ என்பவர் பெற்றோர்த்துவத்தின் விவரிப்பைக் கருத்தாகத் தெரிவித்தார்.[30] பெற்றோர் என்ற

வகையில் எனது பிள்ளைகளைக் கவனிக்கும்படி தெய்வீகத்தால் தரப்பட்ட பொறுப்பு எனக்குள்ளது; ஆனால் நான் அவர்கள்மீது அன்புகூருவதால், அந்தப்பொறுப்பை நிறைவேற்றுதல் எனக்குச் சந்தோஷத்தைத் தருகிறது (அதைச் செய்வது "எனக்குப் பிரியமாக" இருக்கிறது).

யூதர்களும் புறஜாதியாரும் ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளுதல் பற்றிப் பவுல் ஒருசில வசனங்களுக்கு முன்னதாக (வசனங்கள் 7-13) கூறியிருந்தவற்றின் வெளிச்சத்தில், ரோமர் 15:26, 27ஐ வாசியுங்கள். எருசலேமுக்கு நிதிகளை எடுத்துச் செல்வதற்கு, மனிதரீதியான துன்பத்தை நீக்குதல் என்பது மாத்திரம் நோக்கமாக இருக்கவில்லை. அவர் யூதக்கிறிஸ்தவர்கள் மற்றும் புறஜாதிக்கிறிஸ்தவர்களுக்கு இடையிலிருந்த உறவை மேம்படுத்த விரும்பினார். சபையில் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் அன்பு முன்னும் பின்னும் பாய்ந்தோடுவதைக் காண அவர் விரும்பினார் (காண்க 2 கொரிந்தியர் 9:12-14).

**ஸ்பானியாவுக்குப்போக திட்டமிடப்பட்ட ஒரு பயணம்**

ரோமாபுரியில் இருந்த சகோதரர்களைக் காண்பதற்குப் பவுல் எவ்வளவு அதிகமாய் விருப்பம் கொண்டிருந்தாரோ அவ்வளவுக்கு, எருசலேமில் இருந்த யூதக்கிறிஸ்தவர்களுக்குப் பொருள்சகாயமும் மிகமுக்கியமானதாக இருந்தது, இந்தத் திட்டத்தை அவர் தாமே ஈடுபடுதலின்மூலம் கனிகொடுக்கச் செய்ய விரும்பினார். அது செய்யப்பட்டிருக்கும்போது, அவர் ரோமாபுரிக்குப் போக நேரம் இருப்பதாக உணருவார். அவர், இந்தக் காரியத்தை நான் நிறைவேற்றி, இந்தப்பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தபின்பு,[31] "உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன்" என்று கூறினார் (ரோமர் 15:28).

நடபடிகள் 20:4ல் இருந்து நாம், பவுல் எருசலேமுக்குச் சென்ற அவரது பயணத்தில் பல மனிதர்கள் அவருடன் துணையாகச் சென்றனர் என்று அறிகிறோம் (இவர்கள் அனேகமாக, பொருள்சகாயம் செய்த சபைக்குழுமங்களின் பிரதிநிதிகளாக இருந்திருக்கலாம் [காண்க 2 கொரிந்தியர் 8:23]). அவர்களிடத்தில் பணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு, பவுல் ரோமாபுரிக்குச் சென்றிராதது ஏன்? அந்தக் கேள்விக்குப் பதிலானது "இந்தக் காரியத்தை நான் நிறைவேற்றி, இந்தப்பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தபின்பு" என்ற வார்த்தைகளில் உள்ளது. (இந்த வார்த்தைகளை நான் வாசிக்கையில், எங்கள் நண்பர்கள் நார்மன் மற்றும் கேத்தரீன் ஆகியோர் எனக்கு நினைவுக்கு வருகின்றனர், அவர்கள் எப்போதுமே பெரிய தோட்டம் வைத்திருந்து, ஒவ்வொரு பனிக் காலத்திலும் பலமணி நேரங்களை, பழங்களை டின்களில் அடைப்பதில் செலவிடுகின்றனர். பழங்களும் காய்கறிகளும் டின்களில் வைத்து மூடி *முத்திரையிடப்படும்* வரையிலும், அவர்கள் பணி முடிவடைவது இல்லை.) இந்தப் பணப்பரிமாற்றத்தைப்பவுல் *தாமே* "நிறைவேற்றுதல்" முக்கியமாயிருந்ததாக அவர் நினைத்தார்.[32] அவர் பொருள்சகாயம் அளித்தவர்களுக்கு, அந்த நிதிகள் சரியான கரங்களில் சென்று சேர்ந்ததை உறுதிப்படுத்தும் பொறுப்பு கொண்டிருந்தார் (காண்க 2 கொரிந்தியர் 8:19, 20). மற்றும், எருசலேம் சபையில் இருந்த நடத்துனர்களில் (யாக்கோபு [கலாத்தியர் 1:19; 2:9; நடபடிகள் 21:18] போன்ற) சிலருடன் அவருக்கு இருந்த உறவானது, யூதக்கிறிஸ்தவர்கள் அந்தப் பொருள்சகாயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு உதவலாம்.

கடைசியில், யூதர்களுக்குப் புறஜாதியாருடைய "அன்பின் பொருள்சகாயம்"

“பத்திரமாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட” பின்பு, பவுல் “ஸ்பானியாவுக்கு [ரோமாபுரி வழியாக] செல்ல” திட்டமிட்டிருந்தார்.[33] ஸ்பானியா என்பது, “மேற்கில் மிகப்பழமையான ரோமாபுரி மாகாணமாகவும் உலகத்தின் அப்பகுதியில் ரோம நாகரீகத்தின் கொத்தளமாகவும் இருந்தது.”[34] (சிலர், இந்தப் பகுதிதான் பழைய ஏற்பாட்டில் “தர்ஷீஸ்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று நினைக்கின்றனர்.[35]) பவுலின் திட்டத்தின் பேரளவு பற்றிப் புரிந்துகொள்ளுதல் நமக்குக் கடினமாக உள்ளது. கொரிந்துவில் இருந்து, எருசலேம் நகரம் எண்ணூறு மைல்களுக்கும் அதிகமாக இருக்கும். எருசலேமில் இருந்து ரோமாபுரிக்கு ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு மைல்களும் அங்கிருந்து ஸ்பானியாவுக்கு இன்னும் எழுநூறு அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான மைல்களும் இருக்கும். பவுல் சுமார் மூவாயிரம் மைல்களுக்கும் அதிகமான தூரம் கொண்ட பயணம் ஒன்றை (ஏறக்குறைய சாவதானமாக) அறிவித்துக் கொண்டிருந்தார். பழங்காலத்தில் பயணத்தில் உள்ள நிச்சயமற்றதன்மை மற்றும் துன்பங்கள் ஆகியவற்றை ஆழ்ந்து சிந்திக்கையில், திட்டமிடப்பட்ட அவரது பயணமானது திகைக்கச் செய்வதாக இருக்கிறது! இருப்பினும் பவுல், பிரச்சனைகளின் மீதல்ல ஆனால் வாய்ப்புவளத்தின் மீதே கவனம் குவித்தார்.

> பவுலைப் பற்றி, அவர் “எப்போதுமே அப்பால் இருந்த பகுதிகளினால் மனங்கவரப்பட்டிருந்தார்” என்று கூறப்பட்டுள்ளது. அவர் ஒரு கப்பல் நங்கூரம் இடப்பட்டிருந்ததை, அதில் ஏறிப்பயணம் சென்று கடலின் குறுக்கே இருந்த மனிதர்களுக்கு நற்செய்தியைச் சுமந்துசெல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லாது, ஒருக்காலும் கண்டதில்லை. அவர் ஒரு தொலைவில் நீலநிறமாகத் தோன்றும் ஒரு மலைப் பகுதியை, அவற்றைக் கடந்து சென்று சிலுவையின் வரலாற்றை ஒருக்காலும் கேள்விப்பட்டிராத மனிதர்களுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற எண்ணம் இல்லாது ஒருக்காலும் கண்டதில்லை. இவ்வேளையில் பவுல், ஸ்பானியா பற்றிய சிந்தனையினால் மனங்கவரப்பட்டார்.[36]

ஸ்பானியா நாட்டவர்கள் ரோமப்பேரரசில் செல்வாக்கு மிகுந்த மனிதர்களாக இருந்தனர். ஸ்பானியா நாடு சுவிசேஷத்தைக் கொண்டு அடைவதற்கு ஒரு முக்கியமான பகுதியாக இருந்தது மற்றும் அது, பேரரசு தொடர்ந்து விரிவாகிக் கொண்டிருக்கையில் மேலும் மேற்குப் பகுதியில் சுவிசேஷ ஊழியத்திற்கு செயல்படும் அடித்தளமாக இருக்கக்கூடும். மெரில் டென்னீ என்பவர், பவுல் “சுவிசேஷத்துவ ஊழியப்பணிக்கு அரசியல்மேதை போன்றதொரு முகாமை நாடினார். ரோமாபுரி மற்றும் ஸ்பானியா ஆகிய நாடுகளுக்குப் பயணம் செல்வதற்கான அவரது திட்டமானது, அவர் பொது உடைமைப் பேரரசிற்கு இணையாக விசுவாசத்தின் பேரரசு ஒன்றை வைக்க விரும்பினார் என்று காண்பித்தது” என்று எழுதினார்.[37]

இருப்பினும் முதலாவதாகப் பவுல், ரோமாபுரிக்குச் செல்வதை முன்னெதிர் பார்த்தார். அங்கிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர், “நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய[38] சுவிசேஷத்தின் சம்பூரணமான[39] ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன் [எல்லா உறுதியான நம்பிக்கையும் கொண்டிருக்கிறேன்]” என்று கூறினார் (ரோமர் 15:29).

அவர்களின் நேரத்தை இயேசு ஆசீர்வதிப்பார் என்று அவர் நம்பினார் (1:11, 12காண்க). இவ்வாறு, பவுல் தமது திட்டங்கள் மற்றும் ரோமாபுரியில் இருந்த தமது சகோதர சகோதரிகளைக் காண்பதற்கான தமது விருப்பம் ஆகியவற்றைப் பற்றித் தெரிவித்தார்.

## முடிவுரை

நாம், ரோமர் 15ன் கடைசி நான்கு வசனங்களைப் பற்றிப் படிக்கையில், பவுலின் பயணத்திட்டத்தைப் பற்றிப் பேசத் தொடருவோம். இந்தப் பாடத்தின் பெரும்பகுதியானது பவுலின் பயணத்திட்டங்களைப் பற்றிக் கூறுவதற்கென்று அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுடன் *செய்தித்தொடர்பு கொள்வதற்கான* அவருடைய விருப்பத்தினால் நீங்கள் மனம் ஈர்க்கப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அவரது செய்தித்தொடர்பானது அவர் நிறைவேற்ற விரும்பியவற்றை நிறைவேற்றியதா? நமக்குத் தெரியவில்லை. நல்ல செய்தித்தொடர்புக்கு நல்ல "அனுப்புபவர்கள்" போலவே நல்ல "ஏற்பாளர்களும்" தேவைப்படுகின்றனர் - ஆனால் குறைந்தபட்சம் பவுல் முயற்சியாவது செய்தார். பவுல் இத்தாலியில் வந்துசேர்ந்தபோது, ரோமாபுரியில் இருந்து வந்த கிறிஸ்தவர்கள், அவரை வரவேற்றனர் என்று நாம் அறிகிறோம் (நடபடிகள் 28:14, 15).

இன்றைய நாட்களில் சமூகம், குடும்பங்கள், திருமண உறவுகள் மற்றும் சபை ஆகியவற்றில், மிகச்சிறப்பான செய்தித்தொடர்பு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. மிகவும் மேற்கோள் காண்பிக்கப்பட்ட திரைப்பட வரிகளில் ஒன்று, *Cool Hand Luke* என்ற திரைப்படத்தில் இருந்து வருகிறது, அதில் சுடுசொல் பேசும் சிறையதிகாரி ஒருவர்,பிரதான பாத்திரமாக இருப்பவரிடத்தில், "இங்கு நாங்கள் [அடைத்து] வைத்துள்ளவர்கள், செய்தித்தொடர்பில் ஏற்பட்ட தோல் வியே" என்று கூறுகிறார். நீங்கள் உங்கள் உறவுமுறைகளில் பிரச்சனைகளை எதிர் கொள்ளும்போது, அது "செய்தித்தொடர்பு கொள்வதில் ஏற்பட்ட ஒரு தோல்வி யாக" இருக்க அனுமதித்து விடாதீர்கள்.

---

குறிப்புகள்

[1]நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்புடைய வகையில் இந்தப்பத்தியைத் தழுவியமைத்துக்கொள்ளுங்கள். [2]KJV வேதாகமம் *koinonia* என்ற வார்த்தையின் வினைச்சொல் வடிவத்தை "செய்தித்தொடர்பு" ("communicate") என்ற வார்த்தை கொண்டு மொழிபெயர்க்கையில், NASB வேதாகமம் இதே கிரேக்க வார்த்தையை அடிக்கடி "பங்கேற்றல்" ("share") என்று மொழிபெயர்க்கிறது. [3]"புத்திசொல்ல" ["admonish"] என்பது, "மனதில்இட" என்று அடிப்படையில் அர்த்தப்படுகிற (*nous* ["மனம்"] மற்றும் *tithemi* ["இட"] என்பதில் இருந்து வரும்) *noutheto* என்பதில் இருந்து வருகிறது. (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 13.) இவ்வார்த்தை, தேவன் கூறியுள்ளவற்றை மற்றவர்களுக்கு ஞாபகப்படுத்துதல் என்பதாகும். [4]நம்மில் பெரும்பான்மையானவர்கள், இவ்வார்த்தைகள் நமது வாழ்வைப் பற்றிய ஒரு தொகுப்புரை என்ற வகையில் பயன்படுத்தப்பட முடிந்தால் மகிழ்ச்சியடைவோம்:

*“நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று.”* [5]G. Fitzer, “*tolmao*” in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 1183-84. [6]*நினைவூட்டுதல் என்பது ஒரு பிரசங்கியார் அல்லது போதகரின் ஊழியத்தில் முக்கியமான பகுதியாக உள்ளது, ஆனால் நினைவூட்டுதல்களைப் புத்துணர்வுடையவையாகவும் ஏற்புடையவைகளாகவும் ஆக்குதலும் முக்கியமானதாக உள்ளது. ஒரேமாதிரியான விஷயத்தை ஒரே மாதிரியாகவே திரும்பத் திரும்பக் கூற முயற்சி செய்யாதீர்கள்.* [7]*காண்க நடபடிகள் 17:21; 2 தீமோத்தேயு 4:3.* [8]*15ம் வசனத்தில் பவுல், “ஊழியம்” என்பதற்கு வழக்கமான கிரேக்க வார்த்தையை பயன்படுத்தாமல், leitourgos என்பதன் வினைச்சொல் வடிவத்தைப் பயன்படுத்தினார் - இது ஆசாரியராக ஊழியம் செய்தல் என்ற கருத்தை வழக்கமாகக் கொண்டுள்ளது. இந்தப் புத்தகத்தின் முற்பகுதி யில் காணப்படும் “கிறிஸ்தவர்களும் மனித அரசாங்கமும் (13:1-7)” என்ற பாடத்தில் 13:6ன் மீதான கலந்துரையாடலில் “ஊழியக்காரர்கள்” என்பதன் மீதான குறிப்புகளைக் காணவும்.* [9]*மீண்டுமாக 15ம் வசனத்தில் பவுல் “ஊழியம்” என்பதற்கான வழக்கமான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தவில்லை. “ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து” என்பது “ஆசாரியத்துவப் பணியில் ஊழியக்காரனாகுதல்” என்று அர்த்தப்படுகிற hierourgeo என்ற வார்த்தையிலிருந்து வருகிறது (இது hieros [பரிசுத்தமான] மற்றும் ergon [ஊழியம்] என்பவற்றிலிருந்து வருகிறது)* (Vine, 411). [10]*“மேன்மை பாராட்ட” என்பது kauchesis (“மேன்மை பாராட்டும் செயல்”) என்பதில் இருந்து வந்துள்ளது* [Ibid., 268]. KJV *வேதாகமம் வழக்கமாக இவ்வார்த்தையை “மகிமை” அல்லது “மகிமைப்படுத்துதல்” என்று மொழிபெயர்க்கிறது.*

[11]*பவுல் பல அற்புதங்களை நிகழ்த்தினார், உதாரணமாக, நடபடிகள் 13:6-12; 14:3, 8-10; மற்றும் 19:11, 12 ஆகியவற்றைக் காணவும்.* [12]Vine, 682. [13]*எருசலேமில் பவுலின் ஊழியம் வரையறைக்கு உட்பட்டு இருந்ததாலும், அந்தியோகியா என்ற நகரமே அவரது செயல்பாடுகளின் அடித்தள நகரமாக இருந்ததாலும், இவ்விடத்தில் பவுல் தொடக்க இடமாக “எருசலேம்” என்பதைப் பயன்படுத்தியது பற்றிச் சிலர் வியப்படைகின்றனர். பவுல் அனேகமாக, தமது வாசகர்களுக்கு நன்கு பழக்கமான இடங்களைப் பயன்படுத்தி, தமது ஊழியத்தின் எல்லைப் பகுதிகளை மாத்திரம் கொடுத்திருக்கலாம்.* [14]*இல்லிரிக்கம் மாகாணம் என்பது தோராயமாக, செர்பியா மற்றும் மோன்ட்டெனெக்ரோ (முன்னாள் யூகோஸ்லேவியா) மற்றும் அல்பேனியாவின் பாகங்கள் ஆகியவற்றினால் ஏற்பட்ட பகுதி யாகும்.* [15]*நீங்கள் வாழும் நாட்டில் உள்ள இரு இடங்களின் பெயர்களை இவ்விடத்தில் பயன்படுத்துங்கள், அவற்றில் ஒன்று நாட்டின் ஒரு பக்கத்திலும் இரண்டாவது அதன் எதிர்ப்பக்கத்திலும் இருக்க வேண்டும். (காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அல்லது மும்பை முதல் கொல்கத்தா வரை என்பது நமது நாட்டிற்கு ஏற்புடைய சொற்றொடராக இருக்கலாம்.)* [16]*இந்தக் காட்சியானது உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் மாதிரியானதாக இருக்காது. நீங்கள் வாழும் இடத்திற்கு இது வழக்கத்திற்கு மாறானதாகக் காணப்பட்டால், செய்தித்தொடர்பற்ற தன்மையில் இன்னொரு உதாரணத்தை இவ்விடத்தில் பதிலாகப் பயன்படுத்துங்கள் அல்லது இந்த விவரிப்பை முற்றிலும் நீக்கி விடுங்கள்.* [17]*“நாடுகிறேன்” என்பது philotimoumai (philos [“அன்பு”] கூட்டல் time [“கனப்படுத்துதல்”]) என்பதில் இருந்து வந்துள்ளது. பல மொழிபெயர்ப்புகள்* “ambition” *என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. இவ்வார்த்தை “நோக்கம்” என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். மக்கள் பல்வேறு பேரவாக்களும் நாட்டங்களும் கொண்டுள்ளனர், பவுல் ஒரே*

*ஒரு பேரவா மாத்திரம் கொண்டிருந்தார், அது சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்பதே ஆகும்.* (Vine, 21.) [18]*1966ல் இருந்து Star Trek என்ற தொடரானது "இதுவரையிலும் எந்த மனிதரும் சென்றிராத இடத்திற்குத் தைரியமாகச் செல்லும்" சாகசப்பயணத்தில் ஈடுபட்ட விண்வெளிப் பயணிகள் பற்றிய அறிவியல் கற்பனைக் கதைகளை* [*மக்களுக்கு*] *முன்வைத்தது.* [19]Reuel Lemmons, "111,400,000 People and One Preacher," *Firm Foundation* (3 July 1956): 426. [20]*"விருப்பம்" என்பது ஒரு பலமான கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபம், 1 என்ற புத்தகத்தில் 48ம்பக்கத்தில் "சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன் (1:8-15)" என்ற பாடத்தில் 1:11ல் "வாஞ்சை" என்பதன் மீதான குறிப்புகளைக் காணவும்.*

[21]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 385. [22]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 716. [23]*"இப்போழுதோ ... நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ண எத்தனமாயிருக்கிறேன்" என்பது அவரது புறப்படுதல் உடனடியானதாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது.* [24]*முன்பே குறிப்பிட்டப்படி, "பொருள்சகாயம்" என்பது koinonia என்பதில் இருந்து வருகிறது. பணம் கொடுத்தல் என்பது கர்த்தருடைய ஊழியத்தை ஆதரிப்பதில் நாம் பங்கேற்கும் ஒருவழியாக உள்ளது.* [25]*எருசலேமில் இருந்த சபையின் தொடக்க நாட்களில் அதிலிருந்த கிறிஸ்தவர்களின் வழக்கத்திற்கு மாறான பெருந்தன்மை (நடபடிகள் 2:44, 45), அங்கிருந்த கிறிஸ்தவர்களின் பொருளாதாரப் பிரச்சனையில் பங்களித்திருந்தது என்று சில எழுத்தாளர்கள் நம்புகின்றனர். இருப்பினும் எருசலேமில் இருந்த தொடக்ககால சபையின் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் நகரத்தைவிட்டுத் துரத்தப்பட்டு இருந்ததால் (நடபடிகள் 8:1), அந்தத் தொடக்கால செயல்பாடானது, பின்னாளில் அங்கு வாழ்ந்தி ருந்த கிறிஸ்தவர்களை எவ்வாறு பாதித்திருக்கும் என்று காண்பது கடினமாக உள்ளது.* [26]Bruce Barton, David Veerman, and Neil Wilson, *Romans*, Life Application Bible Commentary (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1992), 283. [27]*மெக்கெதோனியா மற்றும் அகாயா என்பவை கிரேக்கநாட்டின் வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களாயிருந்தன. பிலிப்பி மற்றும் தெசலோனிக்கே நகரங்கள் மெக்கெதோனியாவில் இருந்தன; கொரிந்து நகரம் அகாயாவில் இருந்தது.* [28]*எருசலேமுக்கு இந்த நன்கொடையை எடுத்துச் சென்றபோது, பவுலுக்குத் துணையாக ஆசியாவின் மாகாணத்தில் இருந்து இரண்டு மனிதர்கள் வந்தனர். அவர்களில் ஒருவர் எபேசு நகரில் இருந்து வந்திருந்தார் (காண்க நடபடிகள் 21:29).* [29]*ஒருவேளை பவுல், யூதர்களுக்கு தொடக்கத்தில் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருந்த ஆசீர்வாதங்களைப் புறஜாதியார் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர் என்ற உண்மை யைக் குறிப்பிட்டிருக்கலாம். சுவிசேஷத்தை யூதர்கள் மறுத்த செயலானது, சுவிசேஷம் புறஜாதியாருக்கு எடுத்துச் செல்லப்பட்டதை விளைவித்தது. ரோமருக்கு எழுதிய நிருபம், 4 என்ற புத்தகத்தில், ரோமர் 11:17, 31க்கான குறிப்புகளை "பெருமைபாராட்டக் காரணம் இல்லை (11:13-24)" மற்றும் "தேவனுக்கு மகிமையுண்டாவதாக! (11:25-36)" என்ற பாடங்களில் காணவும்.* [30]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 497.

[31]*"இந்தப்பலனை" என்பது "புறஜாதிக் கிறிஸ்தவர்களின் இந்தப்பலன்" என்று அர்த்தப்படுகிறது. புறஜாதிக் கிறிஸ்தவர்களின் பொருள்சகாயத்தை, அவர்களின் பரிவிரக்கமான மற்றும் பெருந்தன்மை வாய்ந்த ஆவிகளின் பலன் என்ற வகையில் பவுல் கண்ணோக்கினார்.* [32]*நான் வாழும் இடத்தில், நாங்கள்* "seal the deal" *என்று*

*கூறுவதுண்டு.* [33]*பிந்திய பாடம் ஒன்றில் நாம், ஸ்பானியா செல்வதற்கான பவுலின் திட்டம் நிறைவேறிற்றா அல்லவா என்பது பற்றி நாம் கலந்துரையாடுவோம்.* [34]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 14. [35]Moo, 495. *தர்ஷீசு என்பதற்கு நன்கு அறிந்த குறிப்பு யோனா 1:3 ஆக உள்ளது.* [36]William Barclay, *The Letter to the Romans,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 3. [37]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 308. [38]KJV *மற்றும்* NKJV *வேதாகமத்தில்* "the gospel of Christ" *என்றுள்ளது (தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளது).* [39]*"சம்பூரணமான" என்பது pleroma என்பதிலிருந்து வருகிறது. மீண்டுமாக pleroma என்பது, "முழு எண்ணிக்கை" என்ற கருத்தைச் சுமந்திருப்பதில்லை. ரோமருக்கு எழுதிய நிருபம், 4 என்ற புத்தகத்தில் காணப்படும், " 'இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்'? (11:25, 26அ)" என்ற பாடத்தில், 11:25க்கான குறிப்புகளைக் காணவும்.* [40]Stott, 379-81